**இலங்கை மாநாட்டுப் பணியகம் - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, பணியகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பணியகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பணியகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பணியகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வது எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக பணியகத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பணியகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பணியகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என

நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எனது தீர்மானங்கள் கணக்காய்வாளரின் அறிக்கை திகதி வரை பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையிலாகும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பணியகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பணியகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பணியகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிறுவகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2017 ஆம் வருடத்தின் மோட்டார் வாகன மீள்மதிப்பீடு சரியாக கணக்குகளில் சீராக்கப்படாமையால் மோட்டார் வாகன திரண்ட பெறுமானத்தேய்வு ஒதுக்க கணக்கு ரூபா 3,158,500 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டமை, மீள் மதிப்பீட்டு இலாபம் ரூபா 3,000,000 இனால் குறைவாக மற்றும் திரண்ட நிதியம் ரூபா | மோட்டார் வாகனம் சம்பந்தப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் இனங் காணப்பட்டு திருத்தப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | முன்னைய ஆண்டில் ஏற்பட்ட தவறுகள் மீளாய்வாண்டின் போது திருத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 158,500 இனால் குறைவாக காண்பிக்கப்பட்டமையால் ஏற்பட்டிருந்த தவறு மீளாய்வாண்டின் போது திருத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டில் மோட்டார் வாகனப் பெறுமானத்தேய்வு ரூபா 773,557 கணக்குகளில் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | கடந்த ஆண்டின் இறுதியில் முற்றாகப் பெறுமானத் தேய்விடப்பட்ட கிரயம் ரூபா 728,967 ஆன தளபாடங்கள் மற்றும் பொருத்திகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 72,896 பெறுமானத்தேய்வு ஒதுக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் பெறுமானத் தேய்விற்கான செலவு அத்தொகையால் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டில் செய்யப்பட்ட பெறுமானத்தேய்வு ஒதுக்கத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பிழையின்றி பெறுமானத்தேய்வு ஒதுக்கம் சீராக்கப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப் படாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் | 728,967 | விபரமான பட்டோலை யொன்று அல்லது பொருட் கணிப்பீட்டு அறிக்கை | எதிர்காலத்தில் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | சான்றுகள் முன்வைக்க வேண்டியமை. |
| (ஆ) | கூட்டங்கள், ஊக்குவிப்புப் பயணங்கள், கருத்தரங்குகள் மற்றும் கண்காட்சிகள் நடாத்துவதற்காக மீளாய்வாண்டில் தூதராலய காரியாலங்களுக்கு வழங்கப்பட்ட பணம். | 6,336,020 | செலவு விபரங்கள் மற்றும் உறுதிப் படுத்தப்பட்ட கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் | கொடுப்பனவு செய்த பின் அதற்கான கொடுப்பனவு அறிக்கை சமர்ப்பிக்கப்படும். | செலவு விபரங்கள் மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியமை. |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

---

சட்டங்கள், விதிகள், மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தினால் 2010 ஆகஸ்ட் 18 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட பணியகத்தின் ஆட்சேர்ப்புத் திட்டம் | பணியகத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு மாற்றமாகத் தேவையான தகைமைகளை கொண்டிராத உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டு 2018 யூன் 25 ஆந் திகதி தொடக்கம் 2019 திசெம்பர் வரையில் சம்பளம், எரிபொருள், மற்றும் வாகனப் படிகள், தொலைபேசிப் படிகள், கடமையின் மீதான வெளிநாட்டு பயணத்திற்கான படிகள் மற்றும் சுகாதாரக் காப்புறுதி பங்களிப்புத் தொகையாக ரூபா 3,825,643 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்களின் அளவு, அதற்காக தகைமையை கருத்திற் கொள்ளும் போது அக்குறிப்பிட்ட துறையில் தொழில்பயிற்சி பெற்ற ஒரே ஒரு விண்ணப்பதாரியாக இருந்தமையுடன் அவரின் 2006 யூலை 14 இலிருந்து 2013 சனவரி 30 வரையில் கனிஷ்ட முகாமைத்துவப் பதவி (JM நிலை) கருத்திற் கொள்ளப்பட்டிருந்தது. | ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு உரிய தகைமைகள் பூரணப் படுத்தப்பட்டிருக்க வேண்டியமை. |
| (ஆ) | தேசிய பெறுகை முகவரின் 2006 சனவரி 25 ஆந் திகதிய அரசின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டி 8.9.1 | வழிகாட்டியின் பிரகாரம் ஒப்பந்தம் வழங்குவதற்கான கடிதம் வழங்கிய பின்னர் அக் கம்பனியுடன் முறையான உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட வேண்டியதுடன் ஆனால், மீளாய்வாண்டின் போது உத்திகளுக்கான திட்டமொனறின் அபிவிருத்தி தொடர்பாக ரூபா 5,900,000 ஆன சேவை ஒப்பந்தமொன்று வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், சட்டரீதியான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்க வில்லை. இவ் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாது பெறப்பட வேண்டிய பிணை பத்திரங்களைப் பெறாமல் அவ் ஒப்பந்தம் தொடர்பாக ரூபா 1,180,000 ஆன முற்பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட ஒப்பந்தம் வழங்குவதற்கான கடிதத்துடன் குறிப்பிட்ட ஒப்பந்தக்காரருடன் செய்யப்பட்ட உடன்படிக்கை ஒன்று பெறப்பட்டுள்ளது. | வழிகாட்டியின் பிரகாரம் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 253,518 ஆன பற்றாக்குறையாக இருந்தமையுடன் அதற்கொத்த முன்னைய வருடத்தின் மிகை ரூபா 88,486,989 ஆகும். அதன் பிரகாரம் விளைவுகளில் ரூபா 88,740,507 ஆன பின்னடைவு அவதானிக்கப்பட்டது. இப்பின்னடைவிற்கு மீளாய்வாண்டின் சுற்றுலா அபிவிருத்தி வரி வருமானம் ரூபா 45,015,713 இனால் குறைவடைந்தமை, சந்தைப்படுத்தலுக்கான செலவுகள், ரூபா 41,004,551 இனால் உயர்வடைந்தமை பிரதானமான காரணங்களாக காணப்பட்டன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதியத்தின் குறைப்பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பணியகத்தின் வங்கிக் கணக்கில் மீளாய்வாண்டிற்குள் பேணப்பட்ட சாதாரண விளைவற்ற வங்கி மீதி ரூபா 216 மில்லியன் மட்டுமென்பதுடன் இவ்விளைவற்ற தொகை பணியகத்தின் மூலதனத் தேவைகளுடன் உயர்ந்த பிரதிபலனைப் பெறக்கூடிய வகையில் முதலீடு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | முன்னால் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப் படுகின்றது. | நிதியம் உயர்ந்த பிரதிபலனுடன் கூடிய முதலீடுகளில் ஈடுபடுத்துவதற்கான கவனம் எடுக்க வேண்டியமை. |